**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ம் நாள் வெள்ளிக்கிழமை

**IA.No.02/2025 in OS.No.201/2023**

**TNTM 03000525/2023**

M.D.குமரேசன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

V.தினகரன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.சரவணபாபு,MBA.,ML., திருமதி P.இளமதி, B.A.BL.,(Hons), ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.D.திருஞானம்,B.A.,B.L., திரு.S..ரவிந்திரநாத்,B.Com.,L.L.B., ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் PW–2 குறுக்கு விசாரணைக்கு கடந்த 06.12.2024 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் PW–2 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டுள்ளது. PW–2ஐ பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மறு திறப்பு செய்யவேண்டி உத்தரவு கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இம்னுவின் மனுதாரர் ஆவார். மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சி தாக்கல் செய்ய வேண்டி அசல் வழக்கில் வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் PW–2 குறுக்கு விசாரணைக்காக ஆஜராக 06.12.2024 அன்று வாய்தா ஏற்பட்டது. உண்மையில், PW–2 சாட்சிக்கு ஸ்டோக் அட்டாக் ஆனதன் பேரில் ஆந்திர மாநிலம் பலமனேரி என்ற ஊரில் தங்கி பச்சிலை மருத்து உட்கொண்டு வந்தார். அதனால், 06.12.2024ம் தேதி PW–2 ஆஜராக இயலவில்லை. PW–2 தற்போது உடல்நிலை தேறி உள்ளதன் பேரில் மனுதாரருக்கு சாட்சியாக குறுக்கு விசாரணையில் ஆஜராக தயாராக உள்ளார். எனவே மேற்படி வழக்கில் PW–2 முக்கிய சாட்சியாக கருதி PW–2ஐ எதிர்தரப்பினில் குறுக்கு விசாரணை செய்யாமல் 06.12.2024 அன்று PW–2

அன்று close செய்யப்பட்டுள்ளதை Reopen செய்யவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. PW–2ஐ பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாய் மனுதாரர் தரப்பினில் உத்திரவு செய்வது மிகவும் அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. மேற்படி மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள Reopen மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்/வாதி தரப்பில் அவர்கள் மேற்கொண்டு வா.சா.2 சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு 06.12.2024 அன்று வாய்தா போடபட்டு இருந்ததாகவும், அன்றை தினம் சாட்சி–2க்கு ஸ்டோக் அட்டாக் ஆனதால் ஆந்திர மாநிலம் பலமனேரி சென்று விட்டதாக மனுதாரர்/வாதி கூறுவது முற்றிலும் பொய்யான சங்கதி ஆகும். மேற்படி சங்கதிகளை மனுதாரர்/வாதியே சட்டப்படி நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார். மேலும் மேற்படி வழக்கில் 04.11.2024ல் வாதி தரப்பில் வாதி தரப்பு சாட்சியம் 2 பிரமாண வாக்குமூலம் மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்பின்னர் 12.11.2024, 21.11.2024, 06.12.2024 ஆகிய தேதிகளில் அளித்தபோது வாதி மற்றும் அவரது சாட்சியம் ஆஜர் ஆகாத காரணத்தால் மட்டுமே மாண்பமை நீதிமன்றத்தால் மேற்படி சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது என்பது குறிப்பிட தக்கது ஆகும். சாட்சி வரவில்லை என்றால் வாதியாவது மேற்படி வழக்கில் ஆஜர் ஆகி இருக்கலாம். ஆனால் மேற்படி வாய்தா தினங்களில் வாதியும் மாண்பமை நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை என்பது குறிப்பிட தக்கது ஆகும்.

3. மனுதாரர்/வாதியானவர் மேற்படி வழக்கினை காலதாமதம் படுத்த வேண்டுமென்றே காலம் தாழ்த்த வேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்டு மனுதாரர்/வாதி இந்த மனுவினை மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதியினை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்டு மனுதாரர் தரப்பில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது இதன் மூலம் நன்கு புலனாகிறது. ஒருவேளை கனம் கோர்ட்டார் அவர்கள் நீதியின் பலனை கருதி மேற்படி மனுவினை Cost உடன் அனுமதிக்குமாறு பிரதிவாதியானவர் வணக்கமாய் தெரிவித்துக்கொள்கிறார். வழக்கை காலதாமதபடுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டே மனுதாரர்/வாதி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பது இதன் மூலம் தெரியவருகிறது. ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் இவ்வெதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது கடனுறுதிச்சீட்டின் பேரிலான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வா.சா.2 ஆக கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள குமரசாமி என்பவர் கடந்த 04.11.2024ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 12.11.2024, 21.11.2024, 29.11.2024, 06.12.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டது. ஆனால், வா.சா.2 மேற்படி 4 வாய்தாக்களிலும் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பது தெரியவருகிறது. 06.12.2024ம் தேதி வா.சா.2 குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், வா.சா.2 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் வா.சா.2ன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது (closed). வா.சா.2ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக முடித்து வைக்கப்பட்டுள்ள வா.சா.2ன் சாட்சியத்தை மறு திறப்பு செய்ய இந்த மனுவும், வா.சா.2ஐ மீண்டும் அழைக்க (Re-call) இ.ம.எண்.1/2025 மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.2றக்கு Stroke Attack ஏற்பட்டு ஆந்திர மாநிலம் பலமனேரியில் தங்கி பச்சிலை மருந்து உட்கொண்டு வந்ததால் 06.12.2024ம் தேதி வா.சா.2னால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்று இந்த மனுவில் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், கடந்த 04.11.2024ம் தேதி வா.சா.2ன் முதன்மை விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அதன்பிறகு வா.சா.2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 12.11.2024, 21.11.2024, 29.11.2024, 06.12.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டது. மேற்படி தேதிகளில் வாதி மற்றும் வா.சா.2 ஆஜராகாததால், நீதிமன்றத்தால் மேற்படி சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது. வழக்கினை காலதாமதம் செய்வதற்காகவும், எதிர்மனுதாரரை அலைகழிக்கவேண்டும் என்பதற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா கடனுறுதிச்சீட்டு சம்மந்தமாக உண்மை நிலவரம் இந்நீதிமன்றத்திற்கு வா.சா.2ன் சாட்சியத்தின் மூலம் தெரியவர வாய்ப்பு உள்ளது. வா.சா.2னை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தால்தான் தாவா கடனுறுதிச்சீட்டு சம்மந்தமாக முழுமையாக தீர்வு காணமுடியும்.

அசல் வழக்கை தீர்வு காண்பதற்கு வா.சா.2ன் குறுக்கு விசாரணை சாட்சியம் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.2ற்க்கு Stroke Attack ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர் தரப்பில் மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 04.11.2024ம் தேதி வா.சா.2ன் முதன்மை விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு வா.சா.2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 12.11.2024, 21.11.2024, 29.11.2024, 06.12.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி தேதிகளில் வாதி மற்றும் வா.சா.2 ஆஜராகாததால், நீதிமன்றத்தால் மேற்படி வா.சா.2ன் சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடித்துவைக்கப்பட்டுள்ளது. போதிய வாய்ப்புகள் வா.சா.2 நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டும், வா.சா.2 குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பது தெரியவருகிறது. தாவா கடனுறுதிச்சீட்டு சம்மந்தமாக உண்மை விவரங்களை தெரிந்துக்கொள்ள வா.சா.2னை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியம் என்பதால் இம்மனு எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூ.500/-ஐ வருகின்ற 08.01.2026 தேதிக்குள் செலுத்தவேண்டும். தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க வாய்தா 09.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.01.02 17:33:45 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.01.02 17:33:56

சார்பு நீதிபதி,
ஆரணி.